# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## MC.No. 9 / 2024

## PW-1

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08-ம் நாள் புதன் கிழமை மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 08.10.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சுப்ரஜா | **பணி** | : | M.Sc., படித்துக்கொண்டிருக்கிறேன். |
| **க /பெ.** | : | காமராஜ் | **வசிப்பிடம்** | : | நெய்வேலி |
| **வயது** | : | 23 | **வட்டம்** | : | குறிஞ்சிப்பாடி |

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் மனுதாரர் மைனர் மித்ராவின் தாய் மற்றும் பாதுகாவலர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| **ம.சா.ஆ.1** | மனுதாரரின் தாயார் சுப்ரஜா என்பவருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தை மாண்பமை சார்பு நீதிமன்றம், நெய்வேலி 25.03.2024 அன்று ஒத்திசைவு மணமுறிவு வழங்கி உத்தரவிட்ட உத்தரவாணை மற்றும் உத்தரவின் சான்றிட்ட நகல். |
| **ம.சா.ஆ.2** | மனுதாரரின் பிறப்பு சான்றிதழின் கணினி வழி சான்றிட்ட நகலின் நகல் |

| | |
|---|---|
| **ம.சா.ஆ.3** | எதிர்மனுதாரரின் தந்தை கலியபெருமாள் என்பவரின் பெயரில் உள்ள பட்டா எண். 2968 ன் கணினி வழி பதிவிறக்க நகல் |

**(மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது.)**